## ஹஜ் செய்முறை சுருக்கம்

| திகதி | (ஹஜ்ஜுல் இஃப்ராத்) இது ஹஜ் மட்டும் செய்பவருக்குரியது. | (ஹஜ்ஜுல் கிரான்) இது ஹஜ்ஜையும், உம்ராவையும் சேர்த்து செய்பவருக்குரியது. | (ஹஜ் தமத்துஃ) இது உம்ராவை செய்து விட்டு மீண்டும் ஹஜ்ஜுக்குத் தனியாக இஹ்ராம் கட்டி (இரண்டையும் சேர்த்து) செய்பவருக்குரியது. |
|---|---|---|---|
| துல் ஹஜ் பிறை எட்டுக்கு முன் ஒரு ஹாஜி செய்பவை | 1-அறிவிக்கப்பட்ட எல்லையை வந்தடைந்ததும் உடல் சுத்தம் செய்து தைக்கப்படாத இரு துண்டுகளை அணிந்து கொண்டு இஹ்ராமுக்குரிய நிய்யத்தை நாவால் மொழிய வேண்டும். ஹஜ் இஃப்ராத் செய்ய விரும்புபவர் "لَبيكَ حَجًّا" லப்பைக்க ஹஜ்ஜன் என்றும் கிரான் செய்ய விரும்புபவர் "لَبيكَ عُمرَةً وَحَجّاً" லப்பைக்க உம்ரதன் வஹஜ்ஜன் என்ற நிய்யத்தோடு தல்பியா கூறியவராக ஆரம்பிக்க வேண்டும்.<br>2- மக்கா வந்தடைந்ததும் தவாஃபுல் குதூம் செய்ய வேண்டும்.<br>3-ஹஜ் இப்ஃராத், ஹஜ் கிரான் செய்பவர்கள் தவாபுல் குதூமுக்குப் பின் ஸஃயி (ஸஃபா, மர்வாவிற்கிடையில் விறைந்து செல்லல்) செய்ய விரும்பினால் செய்யலாம். இது ஹஜ்ஜு டைய ஸஃயீயாகும். பின் மினாவை நோக்கி வர வேண்டும். தவாஃபுல் குதூம் செய்ததும் (ஹஜ்ஜு டைய) ஸஃயீ செய்யா விட்டால் தவாஃபுல் இபாழாவிற்குப் பின் ஸஃயீ செய்ய வேண்டும். துல் ஹஜ் 10 வது நாள் ஜம்ரதுல் அகபாவிற்கு கல்லெறிந்து விட்டு முடியை கத்தரித்து அல்லது சிரைக்கும் வரை இஹ்ராமுடனயே இருத்தல். | | 1-அறிவிக்கப்பட்ட எல்லையில் உடல் சுத்தம் செய்து கொண்டு இஹ்ராம் ஆடை அணிந்து "لَبيكَ عمرةً" லப்பைக்க உம்ரதன் என்று உம்ராவிற்கு மாத்திரம் நிய்யத் வைக்க வேண்டும்.<br>2-தவாஃபுல் குதூம் (உம்ராவின் நிமித்தம்) செய்ய வேண்டும்.<br>3-ஸஃயீ செய்ய வேண்டும்.<br>4-தனது தலை முடியை கத்தரித்து அல்லது சிரைத்துக் கொள்ள வேண்டும்.<br>5-இஹ்ராமுடைய ஆடையை கழற்றி விட்டு தான் விரும்பிய எந்த ஆடையையும் அணிந்து கொள்ளலாம். "யவ்முத் தர்வியா" எனும் துல் ஹஜ் 8வது நாள் தான் இருக்கின்ற இடத்திலிருந்து ஹஜ்ஜு க்காக நிய்யத் வைத்துக் கொள்ள வேண்டும். |
| பிறை 8ம் நாள் | பிறை எட்டில் ளுஹருக்கு முன் மினா வந்து சேர வேண்டும். மினாவில் ளுஹர், அஸர், இஷா, ஆகிய நான்கு ரக்அத் தொழுகைகளை அந்தந்த நேரத்தில் சுருக்கி இரண்டு ரக்அத்களாக தொழ வேண்டும். சேர்த்துத் தொழக் கூடாது. ஹஜ் தமத்துஃ செய்பவர் எட்டாம் நாள் தான் இருக்கின்ற இடத்திலிருந்து ஹஜ்ஜு க்காக நிய்யத் வைத்துக் கொள்ள வேண்டும். | | இருந்த இடத்தில் இருந்து இஹ்ராம் அணிந்த பின் மினாவுக்குச் செல்ல வேண்டும். அதன்பின் ஒவ்வொரு நேரத் தொழுகைகளையும் குறிப்பிட்ட நேரத்தில் தொழவேண்டும். நான்கு ரக்ஆத் தொழுகைகளை சேர்த்துத் தொழாமல் சுருக்கி இரண்டாக தொழவேண்டும். |
| பிறை 9ம் நாள் அரஃபா | 1- சூரியன் உதயமானதும் மினாவை விட்டும் புறப்பட்டு (ளுஹருக்குள்) அரஃபா எல்லைக்கு வந்து விட வேண்டும். அரஃபாவில் ளுஹரையும், அஸரையும் முற்படுத்தி ஒரு அதானும், இரு இகாமத்தும் கூறி சுருக்கித் தொழ வேண்டும். அரஃபாவில் அல்லாஹ்வை அதிகமாகப் புகழ்வதிலும், திக்ர் செய்வதிலும், அதிகமாக அல்லாஹ்விடம் துஆக் கேட்பதிலும் தனது நேரங்களைப் பயன்படுத்த வேண்டும். துஆக் கேட்கும் போது கிப்லாவை முன்னோக்குவது சுன்னத்தாகும். அங்குள்ள மலையை முன்னோக்குவது கூடாது. மேலும் நபி (ஸல்) அவர்கள் தங்களது இரு கரங்களையும் நன்றாக உயர்த்தி துஆக் கேட்டது போன்று நாமும் கரங்களை உயர்த்திக் கேட்பது சுன்னத்தாகும். ஹஜ் கடைமையை நிறைவேற்றுபவர் அரஃபா தினத்தில் நோன்பு நோற்கக் கூடாது. ஹஜ் செய்யாதவர்களுக்கு இத்தினத்தில் நோன்பு நோற்பது சுன்னத்தாகும். "உர்னா" என்ற பள்ளத்தாக்கு அரஃபாவைச் சேர்ந்ததல்ல. அதில் தங்குவதோ, அல்லது அரஃபா மலை உச்சிக்கு ஏறுவதோ சுன்னத்தல்ல.<br>2- அரஃபாவில் சூரியன் மறையும் வரை தங்கி விட்டு அமைதியாகவும், பணிவோடும் முஸ்தலிபாவுக்குச் செல்ல வேண்டும்.<br>3- முஸ்தலிபாவில் ஒரு அதானுடனும், இரு இகாமத்துடனும் மஃரிபை இஷாவோடு சேர்த்தும், சுருக்கியும் தொழ வேண்டும்.<br>4- ஜம்ரதுல் அகபா எனும் இடத்தில் கல் எறிவதற்காக ஏழு சிறிய கற்களை எடுக்க வேண்டும். மினாவிற்கு போயும் கற்களை எடுக்கலாம்.<br>5- முஸ்தலிபாவில் இரவு தங்கி ஃபஜ்ரை அதன் ஆரம்ப நேரத்தில் தொழுது விட்டு "மஷ்அருல் ஹராம்" எனும் இடம் வந்து கஃபாவைப் பார்த்து அல்லாஹ்வைப் புகழ்ந்து அதிகமாக திக்ர், துஆச் செய்ய வேண்டும். "மஷ்அருல் ஹராம்" எனும் இடத்திற்கு செல்ல முடியாவிட்டால் தொழுத இடத்தில் இருந்தவாறே திக்ர், துஆக்களில் ஈடுபடலாம். நன்றாக வெளிச்சம் தென்படும் வரை அவ்விடத்தில் இருக்க வேண்டும். பலயீனமானவர்கள், நோயாளிகள் நடுநிசிக்குப் பின்னர் முஸ்தலிபாவிலிருந்து வெளியேறுவது ஆகுமானதாகும். | | |
| பிறை பத்தாம்நாள் (பெருநாள் தினம்) | **ஹஜ் இப்ராத் செய்பவர்கள் செய்ய வேண்டிவைகள்:**<br>சூரியன் உச்சிக்கு வருவதற்கு முன் மினாவிற்கு வருதல்<br>1-ஜம்ரதுல் அகபா எனும் இடத்தில் தக்பீர் கூறியவாறு ஏழு சிறிய கற்களை எறிவது.<br>2-தலை முடியை சிரைப்பது அல்லது கத்தரிப்பது. சிரைப்பது மிகவும் நல்லது. பெண்கள் விரலின் நுணி அளவு கத்தரித்துக் கொள்ள வேண்டும்.<br>3-இஹ்ராம் ஆடையை கழற்றி விட்டு சாதாரன உடையணிதல். ஜம்ரதுல் அகபாவில் கல்லெறிந்து, தலை முடியையும் எடுத்ததன் பின்னால் இஹ்ராம் கட்டிய நிலையில் அவருக்கு தடுக்கப்பட்ட அனைத்தையும் செய்யலாம். உடலுறவைத் தவிர.<br>4-கஃபா வந்து தவாஃபுல் இபாழாச் செய்தல். தவாஃபுல் இபாழாவை பிறை 11,12,13 ஆகிய நாட்கள் வரையோ, அல்லது தவாஃபுல் வதாஉ (பிரியா விடைத் தவாஃப்புடன் சேர்த்து செய்யவோ பிற்படுத்தலாம். தவாஃபுல் இபாழாச் செய்ததும் உடலுறவு கொள்வது ஆகுமானதாகும்.<br>5-தவாஃபுல் குதூமுடன் ஹஜ்ஜு டைய ஸஃயீயைச் செய்திருக்கா விட்டால் தவாஃபுல் இபாழாவை முடித்து விட்டு அந்த ஸஃயியைச் செய்ய வேண்டும். | **ஹஜ் கிரான் செய்பவர்கள் செய்ய வேண்டியவைகள்:**<br>சூரியன் உச்ச நிலைக்கு வருவதற்கு முன் மினாவிற்கு வருதல்<br>1-ஜம்ரதுல் அகபா எனும் இடத்தில் தக்பீர் கூறியவாறு ஏழு சிறிய கற்களை எறிவது.<br>2-ஹஜ் கிரான் செய்பவர்கள் ஹத்யி குர்பானி கொடுக்க வேண்டும். ஹரத்தில் வசிப்பவர்கள் குர்பானி கொடுப்பது அவசியமில்லை.<br>3-தலை முடியை சிரைப்பது அல்லது கத்தரிப்பது. சிரைப்பது மிகவும் நல்லது. பெண்கள் விரலின் நுணி அளவு கத்தரித்துக் கொள்ள வேண்டும்.<br>4--இஹ்ராம் ஆடையை கழற்றி விட்டு சாதாரன உடையணிதல். ஜம்ரதுல் அகபாவில் கல்லெறிந்து, தலை முடியையும் எடுத்தன் பின்னால் இஹ்ராம் கட்டிய நிலையில் அவருக்கு தடுக்கப்பட்ட அனைத்தையும் செய்யலாம். உடலுறவைத் தவிர.<br>5- கஃபா வந்து தவாஃபுல் இபாழாச் செய்தல். தவாஃபுல் இபாழாவை பிறை 11,12,13 ஆகிய நாட்கள் வரையோ, அல்லது தவாஃபுல் வதாஉ (பிரியா விடைத் தவாஃப்புடன் சேர்த்து செய்யவோ பிற்படுத்தலாம். தவாஃபுல் இபாழாச் செய்ததும் உடலுறவு கொள்வது ஆகும்.<br>6- தவாஃபுல் குதூமுடன் ஹஜ்ஜு டைய ஸஃயீயைச் செய்திருக்கா விட்டால் தவாஃபுல் இபாழாவை முடித்து விட்டு அந்த ஸஃயியைச் செய்ய வேண்டும். | **ஹஜ் தமத்துஃ செய்பவர்கள் செய்ய வேண்டியவைகள்:**<br>1-ஜம்ரதுல் அகபா எனும் இடத்தில் தக்பீர் கூறியவாறு ஏழு சிறிய கற்களை எறிவது.<br>2-ஹஜ் கிரான் செய்பவர்கள் ஹத்யி குர்பானி கொடுக்க வேண்டும். ஹரத்தில் வசிப்பவர்கள் குர்பானி கொடுப்பது அவசியமில்லை.<br>3-தலை முடியை சிரைப்பது அல்லது கத்தரிப்பது. சிரைப்பது மிகவும் நல்லது. பெண்கள் விரலின் நுணி அளவு கத்தரித்துக் கொள்ள வேண்டும்.<br>4--இஹ்ராம் ஆடையை கழற்றி விட்டு சாதாரன உடையணிதல். ஜம்ரதுல் அகபாவில் கல்லெறிந்து, தலை முடியையும் எடுத்தன் பின்னால் இஹ்ராம் கட்டிய நிலையில் அவருக்கு தடுக்கப்படடிருந்த உடலுறவைத் தவிர மற்றய அனைத்தும் ஆகுமானதாகும்.<br>5- கஃபா வந்து தவாஃபுல் இபாழாச் செய்தல். தவாஃபுல் இபாழாவை பிறை 11,12,13 ஆகிய நாட்கள் வரையோ, அல்லது தவாஃபுல் வதாஉ (பிரியா விடைத் தவாஃப்புடன் சேர்த்து செய்யவோ பிற்படுத்தலாம். தவாஃபுல் இபாழாச் செய்ததும் உடலுறவு கொள்வது ஆகும்.<br>6-ஸயி செய்தல். தவாஃபுல் இபாழாவை பிற்படுத்துவது போல இதையும் பிற்படுத்தலாம். |
| பிறை 11ம் நாள் | 1-பதினோராம் இரவில் மினாவில் தங்க வேண்டும்.<br>2-ஜம்ரதுஸ் ஸு க்ரா, ஜம்ரதுல் வுஸ்தா, ஜம்ரதுல் அகபா ஆகிய மூன்று இடங்கிளிலும் சிறிய ஏழு கற்களை தக்பீர் கூறியவாறு எறிய வேண்டும். ஜம்ரதுஸ் ஸு க்ராவில் ஆரம்பித்து ஜம்ரதுல் அகபாவில் முடிக்க வேண்டும். ஜம்ரதுஸ் ஸு க்ரா, ஜம்ரதுல் வுஸ்தா ஆகிய இரண்டிற்கும் கல்லெறிந்த பின் அவ்விடத்தில் (கஃபாவை முன்னோக்கி) துஆச் செய்ய வேண்டும். ஜம்ரதுல் அகபாவில் கல்லெறிந்த பின் துஆச் செய்யாமல் உடனே திரும்பி விட வேண்டும். இதுவே நபிவழியாகும். | | |
| பிறை 12ம் நாள் | 1-12ம் இரவு மினாவில் தங்க வேண்டும்.<br>2-ஜம்ரதுஸ் ஸு க்ரா, ஜம்ரதுல் வுஸ்தா, ஜம்ரதுல் அகபா ஆகிய மூன்று இடங்கிளிலும் சிறிய ஏழு கற்களை தக்பீர் கூறியவாறு எறிய வேண்டும். ஜம்ரதுஸ் ஸு க்ராவில் ஆரம்பித்து ஜம்ரதுல் அகபாவில் முடிக்க வேண்டும். ஜம்ரதுஸ் ஸு க்ரா, ஜம்ரதுல் வுஸ்தா ஆகிய இரண்டிற்கும் கல்லெறிந்த பின் அவ்விடத்தில் (கஃபாவை முன்னோக்கி) துஆச் செய்ய வேண்டும். ஜம்ரதுல் அகபாவில் கலலெறிந்த பின் துஆச் செய்யாமல் உடனே திரும்பி விட வேண்டும். இதுவே நபிவழியாகும். தான் விரும்பினால் பிறை 12ம் நாளுடன் தனது ஹஜ்ஜை முடித்துக் கொள்ளலாம். அவ்வாறு பிறை 12 உடன் ஹஜ்ஜை முடித்துக் கொள்ள விரும்புபவர் சூரியன் மறைவதற்கு முன் மினாவிலிருந்து வெளியேறி விட வேண்டும். பின்பு மக்காவிற்குச் சென்று பிரியாவிடைத் தவாஃப் எனும் "தவாஃபுல் விதாஉ " வைச் செய்ய வேண்டும். | | |

| | |
|---|---|
| பிறை 13ம் | 1-13ம் நாள் இரவு மினாவில் தங்க வேண்டும்.<br>2-ஜம்ரதுஸ் ஸு க்ரா, ஜம்ரதுல் வுஸ்தா, ஜம்ரதுல் அகபா ஆகிய மூன்று இடங்கிளிலும் சிறிய ஏழு கற்களை தக்பீர் கூறியவாறு எறிய வேண்டும். ஜம்ரதுஸ் ஸு க்ராவில் ஆரம்பித்து ஜம்ரதுல் அகபாவில் முடிக்க வேண்டும். ஜம்ரதுஸ் ஸு க்ரா, ஜம்ரதுல் வுஸ்தா ஆகிய இரண்டிற்கும் கல்லெறிந்த பின் அவ்விடத்தில் (க..பாவை முன்னோக்கி) துஆச் செய்ய வேண்டும். ஜம்ரதுல் அகபாவில் கலலெறிந்த பின் துஆச் செய்யாமல் உடனே திரும்பி விட வேண்டும். இதுவே நபிவழியாகும். 3- பின்னர் மினாவிலிருந்து மக்கா வந்து தவா..புல் வதாஉ செய்ய வேண்டும். தவா..புல் வதாஉ செய்வது கட்டாயமாகும். மாதவிடாய், பிரசவத் தீட்டு உள்ள பெண்கள் தவா..புல் வதாஉ செய்வது கடமையில்லை. |
| குறிப்பு | சிறிய தஹல்லுலின் பின் அதாவது துல் ஹஜ் பத்தாம் நாள் ஜம்ரதுல் அகபாவிற்கு கல்லெறிந்து, தலை முடியையும் எடுத்ததன் பின் இஹ்ராம் ஆடையுடன் தடுக்கப்பட்டிருந்த அனைத்தும் ஆகுமாகும். உடலுறவைத் தவிர, ஹஜ்ஜு டைய தவா..பாகிய தவா..புல் இபாழாவையும்செய்து விட்டால் உடலுறவு உட்பட இஹ்ராம்அணிந்திருந்தபோது தடுக்கப்பட்ட அனைத்தும் ஹலாலாகும். |
| கவனத்திற்கு | ஹஜ் செய்யும் நாட்கள் துஆச் செய்தல், குர்ஆன் ஓதுதல் இறைவன் பாதையில் மக்களை அழைத்தல் போன்ற நற்கருமங்கள் செய்யும் நாட்களாகும். ஓவ்வொரு ஹாஜியும் தங்களது நேரங்களைப் பயனுள்ள முறையில் கழிக்க வேண்டும். மேலும் கெட்ட வார்த்தைகள் பேசுவதிலிருந்தும், வீண் தர்க்கங்கள் புரிவதிலிருந்தும் தவிர்ந்து கொள்ள வேண்டும். அல்லாஹ் தனது திருமறையில் இவ்வாறு கூறுகிறான்: ﴿الحج أشهر معلومات فمن فرض فيهن الحج فلا رفث ولا فسوق ولا جدال في الحج﴾<br>தாம்பத்திய உறவு கொள்வதும், கெட்ட வார்த்தைகள் பேசுவதும், வீண் தர்க்கம் செய்வதும்,ஹஜ்ஜில் கூடாது செயலே!. அல் பகரா:197 |

أعمال الحج

( باللغة التاميلية )

# ஹஜ் செய் முறை

மூலம்:

## ஷேய்க்: அப்துல்லாஹ் பின் அப்துர் ரஹ்மான் அல் ஜப்ரீன்

## தமிழில்: மவ்லவி முஹம்மத் இம்ரான் (கபூரி)

| ஹஜ்ஜின் ருக்ன்கள் நான்கு | ஹஜ்ஜின் வாஜிபுகள் ஏழு |
|---|---|
| 1-இஹ்ராம் அணிந்து ஹஜ்ஜு க்காக நிய்யத் வைத்தல்.<br>2-அர..பாவில் தங்குதல்.<br>3-தவா..புல் இபாழாச் செய்தல்.<br>4-ஸ..யி செய்தல். (ஸ..பா, மர்வாவிற்கிடையில் தொங்கோட்டம் ஓடுதல்) | 1-அல் இஹ்ராம்: வணக்கத்தில் நுழைவதற்கு நிய்யத் வைத்தல்.<br>2-சூரியன் மறையும் வரை அர..பாவில் தங்குதல்.<br>3-(பெருநாள் இரவில்) முஸ்தலி..பாவில் தங்குதல்.<br>4-அய்யாமுத் தஷ்ரீக் நாட்களில் (11,12,13ம் இரவுகளில்) மினாவில் தங்குதல்.<br>5-கல் எறிதல்<br>6-தலை முடியை சிரைத்தல், அல்லது கத்தரித்தல்.<br>7-தவா..புல் வதாஉ (பிரியாவிடைத் தவா..ப்) சய்தல். |
| ஹஜ்ஜின் ருக்ன்களில் ஒன்றை விட்டால் அதை மீண்டும் செய்யும் வரை ஹஜ் நிறைவேறாது. | ஹஜ்ஜின் வாஜிபுகளில் ஒன்றை விட்டால் அதற்கு ஈடாக ஹரம் எல்லையில் ஒரு தம் குர்பானி அறுத்துக் கொடுத்தால் போதுமானது. அவரது ஹஜ் நிறைவேறும். |

| ஹஜ்ஜின் சுன்னத்துகள் பல அவைகள் பின்வருமாறு அவற்றில் ஒன்றை விட்டால் அவர் மீது குற்றமில்லை. |
|---|
| 1-இஹ்ராம் அணியும் போது குளித்தல். 2- ஆண்கள் வெண்மை நிற இரு வேட்டிகளை அணிதல். (தைக்காத வெள்ளை நிற இரு வேட்டிகள்) 3- சப்தமிட்டு தல்பியாவை சொல்லல்.<br>4- அர..பா இரவில் (பிறை எட்டு மாலை) மினாவில் தங்குதல்.<br>5- ஜம்ரதுஸ் ஸு க்ரா, ஜம்ரதுல் வுஸ்தா ஆகிய இரண்டிலும் கல் எறிந்த பிறகு துஆச் செய்தல்.<br>6- ஹஜ் இ..ப்ராத், ஹஜ் கிரான் செய்பவர்கள் தவா..புல் குதூம் செய்தல். |
| **இஹ்ராம், நிய்யத் வைத்த பின் தவிர்ந்து கொள்ள வேண்டியவைகள்** |
| 1-முடியை சிரைத்தல் அல்லது கத்தரித்தல். 2- நகம்வெட்டுதல். 3- ஆண்கள் தமது தலையை மறைத்தல். 4- ஆண்கள் தைத்த ஆடைகளை அணிதல்<br>5- நறுமணம் பூசுதல். 6- தரையில் வாழும் மிருகங்களை வேட்டையாடுதல்.<br>7- மனைவியை இச்சையுடன் கட்டியணைத்தல். 8- திருமணம் முடித்தல். 9- உடலுறவு கொள்ளுதல். |
| ** மேற் கூறப்பட்ட தடைகளில் ஏதேனும் ஒன்றை மறதியாகவோ, அல்லது அறியாமலோ, அல்லது வற்புறுத்தலாகவோ ஒருவர் செய்தால் அவர் மீது குற்றமோ, குற்றப் பரிகாரமோ இல்லை. |
| **குர்பானி கொடுத்தல்** |

**அறுக்கும் இடம்:** மினாவில் அறுப்பது சிறந்தது. மேலும் மக்காவிலும் ஹரத்தின் எந்த இடத்திலும் அறுத்துப் பழியிடலாம்

**குர்பானி கொடுக்கும் பிராணிகள்:** ஒட்டகம், மாடு, ஆடு போன்ற பிராணிகள்.

பிராணியின் வயதெல்லை: 1-ஆடு, ஒரு வருடம் பூரணமாக இருத்தல் 2- மாடு, இரு வருடம் பூரணமாகயிருத்தல்.

3-ஒட்டகை: ஐந்து வருடம் பூரணமாயிருத்தல்.

* ஒருவர் ஒரு ஆட்டை அறுப்பது போதுமானது. மாட்டிலும், ஒட்டகையிலும் ஏழு பேர் பங்கெடுக்கலாம். அதாவது: ஏழு பேர் சேர்ந்து ஒரு மாட்டையோ, அல்லது ஒரு ஒட்டகத்தையோ கொடுக்கலாம்.

* குர்பானி கொடுக்க அதற்குரிய பிராணிகள் கிடைக்கா விட்டால், அல்லது போதுமான பண வசதி அவரிடம் இல்லாமல் இருந்தால் அதற்கு ஈடாக பத்து நோன்புகள் நோற்க வேண்டும். ஹஜ் நாட்களில் மக்காவில் மூன்று நோன்புகளும், ஊர் திரும்பியதும் ஏழு நோன்புகளும் நோற்க வேண்டும். அந்நோன்புகளைத் தொடர்ச்சியாகவோ அல்லது பிரித்தோ பெருநாளைக்கு முன்போ, அல்லது பின்போ தான் விரும்பியவாறு நோற்கலாம்.

(அல்லாஹ் மிக அறிந்தவன்)